(ஏழாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

**இல. 436.]**

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

**2015 பெப்புருவரி 20, வெள்ளிக்கிழமை, பி.ப. 1.30 மணிக்கு**

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

4323/ '13

1.

கௌரவ புத்திக பதிரண,— சுற்றுலா மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) மொல்லிக்குளம் – சிலாவத்துறை வீதியை நிர்மாணிப்பதற்குத் தேவையான சரளைக் கற்களைப் பெற்றுக்கொள்வதற்காக வில்பத்து தேசிய வனப் பூங்காவின் 4ஆம் இலக்க வலயத்திற்குரிய பொராளுவல பிரதேசத்தில் பாரியளவில் சரளைக் கல் அகழ்வு நடைபெறுகின்றதென்பதையும்;

(ii) தந்திரிமலை வன சீவராசிகள் வீச்சிடை அலுவலகத்தின் வீச்சிடை வன பாதுகாப்பு உத்தியோகத்தரின் அனுசரணை இதற்கு கிடைப்பதாக பிரதேச மக்கள் குற்றஞ்சாட்டுகின்றார்கள் என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) 1937ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க தாவர, விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 3, 5, 6 ஆம் பிரிவுகள் அனைத்தும் மேலே (அ)(i) இல் குறிப்பிடப்பட்டுள்ள செயலின் காரணமாக மீறப்படுகின்றதென்பதை ஏற்றுக்கொள்வாரா;

(ii) ஆமெனில், மாக பொறியியல் தனியார் கம்பனிக்கு மேற்படி பிரதேசத்தில் சரளைக் கற்களை அகழ்வதற்கான சிபாரிசை வழங்கியவர் யார்;

(iii) வில்லுபத்து தேசிய வனப் பூங்காவில் நடைபெறும், சுற்றாடலுக்கு பெரும் பாதிப்பினை ஏற்படுத்தும் மேற்படி செயற்பாடுகளை உடனடியாக நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பாரா

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

4468/ '13

2.

கௌரவ அனுர திஸாநாயக்க,— வெளிநாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2010, 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில் ஐக்கிய அமெரிக்காவின் இலங்கை தூதரகம் Cranford Johnson Robinson Wood எனும் கம்பனியுடன் கொடுக்கல் வாங்கல் மேற்கொண்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி கொடுக்கல்வாங்கல் இடம்பெற்றுள்ள காலப்பகுதி யாதென்பதையும்;

(iii) மேற்படி கொடுக்கல்வாங்கல் மூலமாக நிறைவேற்றப்பட்டுள்ள பணி அல்லது பணிகள் யாவையென்பதையும்;

(iv) அதன் மூலம் கிடைத்துள்ள நன்மைகள் யாவையென்பதையும்;

(v) மேற்படி பணிகளுக்காக மேற்கொள்ளப்பட்டுள்ள கொடுப்பனவுகளின் பெறுமதி யாதென்பதையும்;

(vi) அதற்காக நிதி ஒதுக்கப்பட்ட செலவுத் தலைப்பு யாதென்பதையும்;

(vii) மேற்படி கம்பனிகளுடன் உடன்படிக்கைகள் கைசாத்திடப்பட்டிருப்பின், அந்த உடன்படிக்கைகளை சபையில் சமர்ப்பிப்பாரா என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4755/ '14

3.

கௌரவ அசோக் அபேசிங்ஹ,— பெருந்தோட்டக் கைத்தொழில்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) குருநாகல் மாவட்டத்திலுள்ள ஒட்டுமொத்த தென்னைத் தோட்டங்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(ii) 2005 ஆம் ஆண்டு முதல் 2013 ஆம் ஆண்டு வரை குருநாகல் மாவட்டத்தின் தேங்காய் உற்பத்தி வருடாந்தம் தனித்தனியே எவ்வளவு என்பதையும்;

(iii) தேங்காய் உற்பத்தியை அதிகரிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வாரா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5112/ '14

4.

கௌரவ அஜித் மான்னப்பெரும,— மின்வலு, எரிசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2013 ஆம் ஆண்டு செத்தெம்பர் 12 மற்றும் 13 ஆம் திகதிகளில் தேசிய மின்சார முறைமைக்கு சேர்க்கப்பட்ட மின்சார அலகுகளின் எண்ணிக்கை மணித்தியாலத்திற்கு கிலோ வாற்றின் அடிப்படையில் வெவ்வேறாக எவ்வளவு என்பதையும் ;

(ii) இதற்குச் செலவான தொகை வெவ்வேறாக எத்தனை மில்லியன் ரூபா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) 2013 ஆம் ஆண்டு செத்தெம்பர் 11, 12 மற்றும் 13 ஆம் திகதிகளில் நீர் மின் நிலையங்களினால் உற்பத்தி செய்யப்பட்டு தேசிய மின்சார முறைமைக்கு சேர்க்கப்பட்ட மின்சார அலகுகளின் (மணித்தியாலத்திற்கு கிலோ வாற்று) எண்ணிக்கை ஒவ்வொரு நாளின் அடிப்படையில் வெவ்வேறாக எவ்வளவு என்பதையும் ;

(ii) மேலே குறிப்பிடப்பட்ட ஒவ்வொரு தினத்திலும் நீர்மின் நிலையங்களினால் உற்பத்தி செய்யப்பட்ட மின்சார அலகுகளின் எண்ணிக்கை ஒன்றுக்கொன்று வேறுபட்டிருப்பின் அவ்வாறு நடைபெறுவதற்கான காரணங்கள் யாவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

5199/ '14

5\.

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— காணி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 'பிம் சவிய' நிகழ்ச்சித்திட்டத்தின் அடிப்படைக் குறிக்கோள்கள் யாவை என்பதையும்;

(ii) நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட தீர்ப்பொன்றுக்கு முரணான வகையில் 'பிம் சவிய' நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் காணிகளை அளவை செய்வதற்கு இயலுமாயுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனின், மேற்படி காணி அளவையானது எந்த சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் மேற்கொள்ளபட்டதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) ஹோமாகம மாவட்ட நீதிமன்றத்தில், வழக்கு எண் 2061 என்ற பிரிவிடல் வழக்கின் தீர்ப்பிற்கு இணங்க 3 பகுதிகளாக பிரிக்கப்பட்ட காணியொன்றை மேற்படி தீர்ப்பிற்கு முரணாக 'பிம் சவிய' உத்தியோகத்தர்கள் 2 பகுதிகளாக பிரித்துள்ளனரென்பதை அறிவாரா என்பதையும்;

(ii) மேற்படி காணியை இவ்வாறு பிரித்தமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

5420/ '14

6\.

கௌரவ அஜித் குமார,— நீர்ப்பாசன மற்றும் கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) மொனராகலை மாவட்டத்தில், கும்புக்கன் ஓயாவுக்கு குறுக்காக 800 ஏக்கர் அளவான நீர்த்தேக்கமொன்றை நிர்மாணிக்க நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளது என்பதையும்;

(ii) மேற்படி நீர்த்தேக்கத்தை நிர்மாணிப்பதன் காரணமாக மொனராகலை மாவட்டத்தில், மிளகு மற்றும் இறப்பர் பயிர்ச் செய்கைக்கு பாரிய தாக்கம் ஏற்படுமென்பதையும்;

(iii) இதனால் மேற்படி பிரதேச மக்களின் பொருளாதார செயற்பாடுகள் தடைப்படுமென்பதையும்;

(iv) நீர்த்தேக்கத்தை நிர்மாணிப்பதன் காரணமாக பிரதேசத்தில் பாரியளவில் வனங்களுக்கான சேதமும் சுற்றாடல் சேதமும் நடைபெறுமென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேலே குறிப்பிடப்பட்ட நீர்த் திட்டத்தின் மூலம் எதிர்பார்க்கப்படும் நோக்கங்கள் மற்றும் இலக்குகள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி நீர்த்தேக்கத்தை நிர்மாணிப்பதன் மூலம் அடைவதற்கு எதிர்பார்க்கப்படும் அபிவிருத்தி யாது என்பதையும்;

(iii) மேற்படி திட்டத்திற்குச் செலவாகும் தொகை எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

5657/ '14

7.

கௌரவ விஜித ஹேரத்,— அரசாங்க நிர்வாக, மாகாண சபைகள், உள்ளூராட்சி மற்றும் சனநாயக ஆட்சி பற்றிய அமைச்சரும் புத்தசாசன அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கை நிருவாக சேவைப் பிரமாணக் குறிப்பில் முதலாவது அட்டவணையின் பின்னிணைப்பு "அ" வில் குறிப்பிடப்பட்டுள்ள இ.நி.சே. விசேட தரத்திற்குரிய பதவிகளில் திணைக்களத் தலைவர் பதவிகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) இப்பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள மேற்படி இ.நி.சே. விசேட தரப் பதவிகளின் நியமன அதிகாரி யாரென்பதையும்;

(iii) இலங்கை நிருவாக சேவையின் விசேட தரத்திற்குரிய பதவிகளுக்கு நியமிக்கும் நடைமுறை யாதென்பதையும்;

(iv) இ.நி.சே. விசேட தரத்திற்குரிய பதவிகளுக்கு ஏற்கனவே நியமிக்கப்பட்டுள்ள இ.நி.சே. அல்லாத அலுவலர்களின் எண்ணிக்கை யாஎன்பதையும்;

(v) 2012.07.02 தொடக்கம் 2014.01.01 வரையிலான காலப்பகுதியில் இ.நி.சே. விசேட தரப் பதவிகளில் வெற்றிடங்கள் நிலவிய நிறுவனங்கள் அப் பதவிகளின் பெயர்கள் மற்றும் நிறுவனங்கள், பதவிகளின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இ.நி.சே.தரம் ஒன்று அலுவலர்களை விசேட தரத்திற்கு தரமுயர்த்துவதற்காக 2014 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் நடாத்தப்பட்ட நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்ட தகைமைகளைப் பூர்த்தி செய்திருந்த ஒவ்வொரு அலுவலரினதும் பெயர், தரம் ஒன்றுக்கு தரமுயர்த்தப்பட்ட திகதி, பட்டப்பின் பட்டம் செல்லுபடியாகும் திகதி, அப்பட்டத்தை வழங்கிய பல்கலைக்கழகம், மற்றும் பட்டத்தின் பாடத்துறை வெவ்வேறாக யாதென்பதை அவர் சபையில் சமர்ப்பிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

4405/ '13

8.

கௌரவ புத்திக பதிரண,— பெருந்தோட்டக் கைத்தொழில்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) 2013ஆம் ஆண்டில் சனவரி தொடக்கம் ஒக்றோபர் வரையான காலப்பகுதியில் இலங்கையில் மனைசார்ந்த தேங்காய் நுகர்வு எவ்வளவு என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) குறித்த காலப்பகுதியில் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி செய்யப்பட்ட தேங்காய்களின் அளவு வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) இலங்கையில் உற்பத்தி செய்யப்படும் ஏற்றுமதியை இலக்காகக் கொண்ட தேங்காய் சார்ந்த உற்பத்திகள் யாவை என்பதையும்;

(iii) அவ்வாறான ஒவ்வோர் உற்பத்தியிலிருந்தும் வருடாந்தம் ஏற்றுமதி செய்யப்படும் அளவு வெவ்வேறாக எவ்வளவென்பதையும்

அவர் இச்சபையில் சமர்ப்பிப்பாரா?

(இ) (i) மேற்படி (அ) இல் குறிப்பிடப்பட்டுள்ள காலப்பகுதியில் தேங்காய்த் தண்ணீர் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி தேங்காய்த் தண்ணீர் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது தேங்காய்த் தண்ணீரின் வடிவத்திலா இன்றேல் தேங்காய் தண்ணீர் சார்ந்த உற்பத்தியாகவா என்பதையும்;

(iii) தேங்காய்த் தண்ணீர் அல்லது அதுசார்ந்த உற்பத்திகள் ஏற்றுமதி செய்யப்பட்ட நாடுகள் யாவை என்பதையும்;

(iv) அந்த ஏற்றுமதிகளின் அளவு யாதென்பதையும்;

(v) தேங்காய்த் தண்ணீர் அல்லது அதுசார்ந்த உற்பத்திகளை ஏற்றுமதி செய்ததன் மூலம் பெறப்பட்ட மொத்த வருமானம் யாதென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஈ) (i) இலங்கையில் தேங்காய் உற்பத்தியை ஆரம்பிக்கும் ஒருவருக்கு அரசாங்கத்தால் வழங்க முடியுமான நிவாரணங்கள் யாவை என்பதையும்;

(ii) இந்த நிவாரணங்களை பெற்றுக்கொள்வதற்காக உற்பத்தியாளர் ஒருவர் கடைப்பிடிக்க வேண்டிய முறையியல் யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(உ) இன்றேல், ஏன்?

4573/ '13

9.

கௌரவ அனுர திசாநாயக்க,— சமூக சேவைகள், நலன்புரி மற்றும் கால்நடைவளர்ப்பு அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) இலங்கையில் வருடாந்த பால் மற்றும் பால் சார்ந்த உற்பத்திகளுக்கு தேவைப்படும் திரவப் பாலின் அளவு எவ்வளவென்பதை அவர் கூறுவாரா?

(ஆ) (i) இறக்குமதி செய்யப்படும் 01 கிலோ கிறாம் பால்மாவிற்கு அறவிடப்படும் தொகை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி விலை, இறக்குமதி செய்யப்பட்ட பால்மாவை உள்நாட்டு சந்தையில் விற்பனை செய்யும் விலையின் சதவீதமாக கொள்ளப்படுகின்றபோது பெறுமதி எவ்வளவு என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

4771/ '14

10.

கௌரவ அசோக் அபேசிங்க,— உள்ளகப் போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை போக்குவரத்துச் சபையின் கீழ் தற்போது ஓட்டத்தில் ஈடுபடுத்தப் படுகின்ற மொத்த பேருந்துகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) அங்கு பணியாற்றுகின்ற மேலதிக சாரதிகள் மற்றும் நடத்துனர்கள் சம்பந்தமாக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

(iii) மேலதிக சாரதிகள் மற்றும் நடத்துனர்கள் எண்ணிக்கைக்கு பொருந்துகின்ற வகையில் பேருந்துகளை தருவிப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(iv) வரவு செலவுத் திட்டத்தின் மூலம் அதற்காக பணம் ஒதுக்கப்பட்டிருந்ததா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5113/ '14

11\.

கௌரவ அஜித் மான்னப்பெரும,— நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2014.01.01 ஆம் திகதி முதல் அமுல்படுத்தப்பட்ட விவசாய உழவு இயந்திரங்களுக்காக அதிகரிக்கப்பட்ட வரி வீதம் எவ்வளவென்பதையும்;

(ii) விவசாய உழவு இயந்திரங்களுக்கான மேற்படி வரி அதிகரிப்பை அமுல்படுத்துகின்றபோது விவசாயிகளுக்கு அல்லது நாட்டுக்கு ஏற்படுமென எதிர்பார்க்கப்படுகின்ற நன்மைகள் யாவையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) 2012, 2013 ஆம் ஆண்டுகளிலும் மற்றும் 2014 ஆம் ஆண்டின் ஏப்பிரல் மாதம் இறுதி வரையிலும் பதிவு செய்யப்பட்டுள்ள புதிய நான்கு சக்கர விவசாய உழவு இயந்திரங்களின் எண்ணிக்கை தனித்தனியாக எவ்வளவென்பதையும் அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) விவசாய உழவு இயந்திரங்களுக்கான வரி அதிகரிப்பின் ஊடாக விவசாயிகளுக்கும் கமத்தொழிலுக்கும் பாதகமான தாக்கங்கள் ஏற்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அத்தகைய பாதகமான தாக்கங்களை தடுப்பதற்கு எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

5202/ '14

12\.

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— முஸ்லிம் சமய அலுவல்கள் மற்றும் தபால் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) அரசாங்க சேவையில் ஈடுபட்டுள்ள முஸ்லிம் சமய பக்தர்கள் உம்ரா மற்றும் ஹஜ் யாத்திரைக்காக வெளிநாடு செல்வதற்கு அனுமதி பெற்றுக் கொள்வதற்காக சமர்ப்பிக்கின்ற விண்ணப்பப்படிவத்துடன் முன்வைக்க வேண்டிய ஆவணங்கள் யாவை என்பதையும்;

(ii) ஏற்புடைய நபர் ஒரு ஆசிரியராக இருக்கும் பட்சத்தில், இவருக்கு மேற்படி யாத்திரைக்கு சம்பளத்துடனான லீவு உரித்தாகுமா என்பதையும்;

(iii) உம்ரா யாத்திரை மற்றும் ஹஜ் யாத்திரைக்கு வெளிநாடு செல்பவர்களுக்கு எளிமையான விண்ணப்பப்படிவம் மற்றும், வீசா வழங்கும் முறையியலொன்று உருவாக்கப்பட வேண்டும் என்பதை ஏற்றுக் கொள்வாரா என்பதையும்;

(iv) ஆமெனில், அதற்கான தலையீடு மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(v) மேற்படி யாத்திரையில் ஈடுபடுகின்ற அரசாங்க ஊழியர்களுக்கு அனுமதிக்கப்படுகின்ற லீவு நாட்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(vi) மேற்படி லீவு நாட்கள் போதுமானதா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4473/ '13

13\.

கௌரவ புத்திக பதிரண,— அரசாங்க நிர்வாக, மாகாண சபைகள், உள்ளூராட்சி மற்றும் சனநாயக ஆட்சி பற்றிய அமைச்சரும் புத்தசாசன அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) மாத்தறை உயன்வத்த விளையாட்டு மைதானம், மாவட்ட மற்றும் அகில இலங்கை மட்டத்திலான விளையாட்டுப் போட்டிகளை நடாத்தப் பயன்படுத்தப்படும் பொது விளையாட்டு மைதானம் என்பதையும்;

(ii) மாத்தறை நகரவாசிகள் பலர் இம்மைதானத்தை நாளாந்தம் தனது உடல் நலத்துக்காக உபயோகிக்கின்றனர் என்பதையும்

(iii) மாத்தறை மாநகர சபையினால் இம்மைதானத்தை இலங்கைக் கிரிக்கெட் நிறுவனத்திற்கு விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றதென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) இவ்விளையாட்டு மைதானம் இலங்கைக் கிரிக்கெட் நிறுவனத்திற்கு விற்பனை செய்யாவிட்டால் இப்பிரதேச மக்களுக்கு பல அசௌகரியங்களுக்கு முகங்கொடுக்க நேரிடுமென்பதை ஏற்றுக்கொள்வாரா;

(ii) அவ்வாறாயின், இவ்விளையாட்டு மைதானம் விற்பனை செய்யப்படுவதை நிறுத்த நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

4580/ '13

14\.

கௌரவ அநுர திசாநாயக்க,— வெகுசன ஊடக, பாராளுமன்ற அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2013 ஆம் ஆண்டில் நடைபெற்ற பொதுநலவாய அமைப்பின் தலைவர்களின் மாநாட்டுக்காக அப்போதைய வெகுசன ஊடக, தகவல் அமைச்சு மற்றும் அதனுடன் சம்பந்தப்பட்ட ஏனைய நிறுவனங்களால் ஏற்கப்பட்ட மொத்தச் செலவுத் தொகை எவ்வளவு என்பதையும்;

(ii) இப் பணத்தொகை பெற்றுக் கொள்ளப்பட்ட முறை யாது என்பதையும்;

(iii) இப் பணத்தொகை செலவிடப்பட்ட முறை யாது என்பதையும்;

(iv) மேற்படி நாட்டுத் தலைவர்களின் மாநாட்டுக்கான ஊடக பிரச்சாரப் பணிகளுக்காக ஏற்கப்பட்ட பணத்தொகை எவ்வளவு என்பதையும்;

(v) பிரச்சாரப் பணிகள் வழங்கப்பட்ட மின்னியல் மற்றும் அச்சு ஊடகங்கள் யாவை என்பதையும்;

(vi) மேற்படி ஒவ்வொரு ஊடக நிறுவனத்தின் சார்பிலும் செலுத்தப்பட்ட பணத் தொகை தனித்தனியே எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4772/ ’14

15\.

கௌரவ அசோக் அபேசிங்க,— உள்ளகப் போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,—(2)

(அ) (i) இலங்கை போக்குவரத்துச் சபையின் பேருந்துகள் மற்றும் தனியார் பேருந்துகளுக்காக ஒருங்கிணைந்த நேரசூசி முறையொன்று நடைமுறைப் படுத்தப்படுகின்றதா என்பதையும்;

(ii) இலங்கை போக்குவரத்துச் சபையின் பேருந்துகளின் எண்ணிக்கையானது தனியார் பேருந்துகளின் எண்ணிக்கையை விட குறைவாக உள்ளதால் மேற்படி ஒருங்கிணைந்த நேரசூசி முறையின் மூலம் பாரதூரமான நட்டம் இலங்கைப் போக்குவரத்துச் சபைக்கு ஏற்படுகின்றதா என்பதையும்;

(iii) ஆமெனில், இலங்கை போக்குவரத்துச் சபைக்கு ஏற்படுகின்ற நட்டத்தை தவிர்த்துக்கொள்வதற்காக ஏதேனும் நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

---

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## பிரேரணை முன்னறிவித்தல்

1\.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அமர்வு,— 7 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளினாலும் 2011.04.07 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட பிரேரணையினாலும் தடைபெறாமல், இன்றைய தினம் சபை அமர்வு நேரம் பி.ப. 1.30 மணி முதல் பி.ப. 8.30 மணி வரை இருக்குமாக. பி.ப. 7.30 மணிக்கு 7(5) ஆம் இலக்க நிலையியற் கட்டளை தொழிற்படுமாக.

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

* 1.

புகையிலை மற்றும் மதுசாரம் மீதான தேசிய அதிகாரசபை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 2.

ஆட்சியுரிமை (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (2014, ஓகத்து 07) [1].

* 3.

சுரங்கங்கள், கனிப்பொருட்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 4.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— ஐக்கிய நாடுகள் சபைச் சட்டத்தின் ஒழுங்குவிதிகள்,— 1968 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க ஐக்கிய நாடுகள் சபைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் வெளிநாட்டலுவல்கள் அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2014 திசெம்பர் மாதம் 11 ஆம் திகதிய 1892/37 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2015.02.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 5.

நிதி அமைச்சர்,— முத்திரைக் கட்டண (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளை,— அரசியலமைப்பின் 44(2) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2006 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, முத்திரைக் கட்டண (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழான முத்திரைக் கட்டணம் தொடர்பில் நிதி, திட்டமிடல் அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2014 செத்தெம்பர் 30 ஆம் திகதிய, 1882/17 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2014.12.12 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 6.

மின்வலு மற்றும் எரிசக்தி அமைச்சர்.— இலங்கை மின்சாரச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 2009 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க, இலங்கை மின்சாரச் சட்டத்தின் 54 ஆம் பிரிவின் கீழ் மின்வலு, சக்தி அமைச்சரால் இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் சிபாரிசுகளின் பேரில் மின்சார (அனுமதிப்பத்திரம் தொடர்பில் விண்ணப்பித்தலும் விலக்களிப்பும்) தொடர்பில் ஆக்கப்பட்டு, 2014 ஒற்றோபர் 10 ஆம் திகதிய, 1883/12 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2014.11.24 ஆம் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 7.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழ் தீர்மானம் (இல.1),— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் குவைட் நாட்டரசின் அரசாங்கத்திற்கும் இடையே முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் இருவயினொத்த முதலீட்டுப் பாதுகாப்பு ஒப்பந்தம், அத்தகைய வெளிநாட்டு அரசினாலும், அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது கட்டியமைக்கப்பட்ட கூட்டுத்தாபனங் களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக 2009 நவெம்பர் மாதம் 05 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும் 2011.09.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒப்பந்தமானது அது தேசியப் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமாகவுள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 8.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழ் தீர்மானம் (இல.2),— முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் பாதுகாப்பு என்பவற்றுக்கான இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கம் மற்றும் வியட்நாம் சோசலிச குடியரசு அரசாங்கம் ஆகியவற்றுக்கிடையேயான ஒப்பந்தம், அத்தகைய வெளிநாட்டு அரசினாலும், அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது கூட்டிணைக்கப்பட்ட கூட்டுத்தாபனங்களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக 2009 ஒற்றோபர் மாதம் 22 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும் 2011.09.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான ஒப்பந்தமானது அது தேசியப் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமாக உள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 9.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழ் தீர்மானம் (இல. 3),— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் செக் குடியரசு அரசாங்கத்திற்கும் இடையே முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் இருவயினொத்த முதலீட்டுப் பாதுகாப்பு ஒப்பந்தம், அத்தகைய அத்தகைய வெளிநாட்டு அரசினாலும், அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது கூட்டியமைக்கப்பட்ட கூட்டுத்தாபனங்களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக 2011 மார்ச் 28 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும், 2014.08.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒப்பந்தமானது தேசிய பொருளாதார அபிவிருத்திக்கு அத்தியவசியமாகவுள்ளதென இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கிறது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 10.

உள்நாட்டு போக்குவரத்து அமைச்சர்,— மோட்டார் வாகனச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— (203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவுடனும் 19 ஆம் உட்பிரிவுடனும் சேர்த்து வாசிக்கப்படும் அச் சட்டத்தின் 237 ஆம் பிரிவின் கீழ் போக்குவரத்து அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2013 யூலை மாதம் 31 ஆந் திகதிய 1821/31 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2013.11.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 11.

நீதி மற்றும் தொழில் உறவுகள் அமைச்சர்,— ஊழியர் சகாய நிதியச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— காலத்துக்குகாலம் திருத்தப்பட்டவாறான 1958 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, ஊழியர் சகாய நிதியச் சட்டத்தின் 46 ஆம் பிரிவின் கீழ் தொழில் மற்றும் தொழில் உறவுகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு 2013 மே மாதம் 13 ஆந் திகதிய 1810/20 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2013.06.21 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 12.

காணி அமைச்சர்,— உரித்துப் பதிவுச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1998 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, உரித்துப் பதிவுச் சட்டத்தின் 60 ஆம் மற்றும் 62 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 67 ஆம் பிரிவின் கீழ் காணி, காணி அபிவிருத்தி அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2009 ஒகத்து மாதம் 24 ஆந் திகதிய 1616/23 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2010.05.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 13.

சுற்றுலா மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர்,— தாவர விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் கீழ் கட்டளை,— (469 ஆம் அத்தியாயமான) தாவர விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் கமநல சேவைகள், வனசீவராசிகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2011 திசெம்பர் மாதம் 06 ஆந் திகதிய 1735/21 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.12.13 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

14.

ஸ்ரீ லங்கா மகளிர் சம்மேளனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

15.

தற்காப்புக் கலைகளுக்கான நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

16.

த இன்ஸ்ரிரியூட் ஒவ் சேர்டிபைட் பப்ளிக் எக்கவுன்டன்ஸ் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

17.

மெடிசினா ஓல்டனேடிவா நிறுவனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

18.

உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் (திருத்தச்) சட்டமூலம் — பரிசீலனை.

19.

அல் ஜாமியாத்துல் கவ்ஸிய்யா (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

20.

இலங்கை நிர்மாணக் கைத்தொழில் சம்மேளனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றன.

---

[1] ''சட்டமூலம் இப்பொழுது இரண்டாம் முறையாக மதிப்பிடப்பெறுமாக'' எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

---